# கிராமின் கிருஷி மவுசம் சேவா

## இந்திய வானிலை துறை

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

## கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-06-2023**

ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)

| வானிலை காரணி | 2023-06-24 | 2023-06-25 | 2023-06-26 | 2023-06-27 | 2023-06-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 4.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 33.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 27.0 | 26.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 12 | 14 | 16 | 12 | 16 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 230 | 200 | 250 | 250 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 6 | 6 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலையானது 33 முதல் 34 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலையானது 26-27 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் சராசரியாக 40 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 முதல் 16 கிலோ மீட்டர் வேகத்தில் தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| விவசாயிகள் தற்போது பெய்யக்கூடிய மழையை பயன்படுத்தி நிலங்களை உழவு செய்யுமாறு அறிவுறுத்தப்படுக்கின்றனர். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தமிழ்நாட்டில் ஜூன் 28 முதல் ஜூலை 04 வரை மழை இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னை மரங்களை சுற்றியுள்ள வட்டபாத்தியில் தென்னை ஓலை மற்றும் தென்னைநார் கழிவுகளை கொண்டு மூடாக்கு செய்வதன் மூலம் ஆவியாதல் விகிதத்தை குறைத்து நீரை சிக்கனப்படுத்தலாம். |
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும்.ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத்தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | வெப்பத்தின் தாக்கத்தால் கால்நடைகளில், பால் உற்பத்தி குறைவு, ,உடல் எடை குறைதல், கன்றுகளின் வளர்ச்சி விகிதம் குன்றுதல் போன்றவை ஏற்படுகின்றன. இதனை தடுக்க கொட்டகையினை காற்றோட்டமாக அமைக்க வேண்டும்.கொட்டகையின் மேற்கூரை வெப்பம் அடைய வண்ணம் இருக்க தென்னை ஓலை,கீற்று ,தட்டிகள் ஆகியவை பயன்படுத்தி மேற்க்கூரை வெப்பமாகாத வண்ணம் தடுக்கலாம். 1. கால்நடைகளுக்கு அடிக்கடி குளிர்ந்த நீரை வழங்குதல் மற்றும் வைட்டமின்-பி சப்ளிமெண்ட்ஸ் டானிக் தினமும் 30 மி.லி பசுவுக்கும் மற்றும் 10 மி.லி கன்றுகளுக்கும் கொடுக்கலாம். |